செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 393 நாள்: 7/7/17

மாவட்ட சமூக நல அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

## பத்திரிக்கை செய்தி

மாவட்ட சமூக நல அலுவலகம் வேலூர் மாவட்டம், விதவை, கணவனால் கைவிடப்பட்டவர், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளி ஏழைப் பெண்களுக்கு மின் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

### விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள்

1. வருமானச் சான்று ரூபாய்.72,000/–க்குள் (வட்டாட்சியரிடம் பெற வேண்டும்)
2. இருப்பிடச் சான்று (வட்டாட்சியரிடம் பெற வேண்டும் அல்லது ரேசன் கார்டு)
3. தையல் பயிற்சி சான்று (பதிவு செய்யப்பட்ட தையல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது). (6 மாத கால பயிற்சி)
4. வயது சான்று (20 முதல் 40 வயது வரை) (கல்வி சான்று அல்லது பிறப்புச் சான்று)
5. சாதிச் சான்று.
6. கடவுச் சீட்டு(Passport Size Photo) அளவு மனுதாரரின் கலர் புகைப்படம்–2
7. ஆதார் அடையாள அட்டை.
8. விதவை, கணவனால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற மகளிர் மற்றும் மாற்றுத்திறனாளி பெண் சான்று நகல்.

மேற்காணும் ஆவணங்களுடன் விண்ணப்பங்களை வேலூர் மாவட்ட சமூக நல அலுவலகத்தில் 15.07.2017 க்குள் சமர்ப்பிக்குமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி:

1. மாவட்ட சமூக நல அலுவலர்,
   மாவட்ட சமூக நல அலுவலகம்,
   மாவட்ட ஆட்சியரக வளாகம் 4ஆம் தளம்,
   வேலூர் மாவட்டம்.
   தொலைபேசி எண்.0416–2252663.

2. சார்ந்த வட்டார வளர்ச்சி அலுவலகங்கள்,
   வேலூர் மாவட்டம்.

4/7/2017
மாவட்ட சமூக நல அலுவலர்,
வேலூர் மாவட்டம்.

07/7/17
செ.ம.தொ.அ. வேலூர்– 9.

மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்.